# எது உண்மையான வெற்றி...?

யார் அதிர்ஷ்டசாலிகள் ...

“விரும்புவதை செயல்படுத்துவதைவிட, செயல்படுத்திக் கொண்டிருப்பதை விரும்புபவர்களே அதிர்ஷ்டசாலிகள்.”

விரும்பும் செயலில் முழுவதும் வெற்றி கிடைக்காவிட்டாலும், ஓரளவு கிடைத்த வெற்றியே சிறந்த அனுபவமாகி மனநிறைவை இரட்டிப் பாக்கும். பொருளையும், புகழையும் தேவைக்கு அதிகமாக குவித்திருந்தாலும் பலர் மனநிறைவோ, மகிழ்ச்சியோ இன்றி வாழ்வில் தோல்வியடைகின்றனர்.

எனவே, வாழ்க்கையில் எது உண்மையான வெற்றி? என்ற கேள்விக்கான விடையைத்தான் இன்று தேடப் போகிறோம். முதலில் வெற்றியை தீர்மானிக்கும் நடுவர் யார்? என்பதை அறிந்து கொள்ள வேண்டும். சமூகம், பொருளாதாரம் வழங்கும் தீர்ப்பே வெற்றியை தீர்மானிக்கிறது என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியானால், புகழ்–செல்வங்களை குவித்திருக்கும் பலர் இன்று நிம்மதியாக வாழவில்லையே...! நிம்மதி எங்கே கிடைக்கிறது என்று வாழ்க்கையின் மறுபுறம் தேடிக் கொண்டிருக்கிறார்களே...!

இந்த கேள்விக்கு ஒரே வார்த்தையில் விடை சொல்வதென்றால் ‘மனமே’ வெற்றியை நிர்ணயிக்கும் உண்மையான நடுவர்.

“எந்தெந்த பண்புகளை கொண்டிருந்தால், ‘மனம்’ உங்களை வெற்றியாளர் என்று அறிவிக்கும்?” என்ற வாழ்க்கை விளையாட்டைத்தான் இன்று பார்க்க போகிறோம்.

தனித்துவம் தங்கமான குணம்: ‘அன்ன நடை நடப்பவர்களை பார்த்து, அதுபோல் நடக்க முயற்சித்து இயல்பான தன்நடையை பலர் மறக்கின்றனர்.’

இளைஞர்களில் சிலர் தன்னை சுற்றியுள்ள வெற்றியாளர்களை மனதில் நிறுத்திக் கொண்டு அவர்களைப் போல தானும் உயர வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதில் தவறொன்றுமில்லை. ஆனால் அவர்களின் பழக்கவழக்கங்களை அப்படியே பின்பற்ற நினைக்க கூடாது.

‘மாணவப் பருவத்தில் கால்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கிய ஒருவர், பிற்காலத்தில் புகழ்பெற்ற சாதனையாளராக விளங்கினார்,’ என்பதை அறிந்து கொண்டு தானும் கால்பந்தாட்ட வீரராகி, பின்னர் வெற்றியாளராக வேண்டும் என்று நினைப்பதுதான் தவறு. சிலர் திறமைசாலிகளாக இருந்தும், வாழ்க்கையை எதிர்கொள்ளும் அணுகுமுறை சரியில்லாததால் தோல்வியைத் தழுவ நேரிடுகிறது.

கவிஞர் கண்ணதாசன் போன்று சிறந்த கவிஞராக வேண்டும் என்று எண்ணுபவர்கள் அவருடைய பழக்கவழக்கங்களை அப்படியே காப்பியடித்து கவிஞராகிவிட முடியாது. தங்களுக்கான பாணியில் சுயமாக சிந்தித்து செயல்பட்டால் மட்டுமே வெற்றி கிடைக்கும்.

முயற்சி உங்களை அடையாளப் படுத்தும்; ‘பிறர் பாணியில் வாழ வேண்டும்’ என்று நினைப்பவர்கள் முயற்சியை விரும்புவார்கள். ஆனால் முயற்சியே செய்யாமல் வெற்றியை மட்டும் விரும்பும் இளைஞர்களும் உள்ளனர்.

படிப்பை முடித்தவுடன், பெயரளவில் ஒன்றிரண்டு முயற்சி செய்துவிட்டு, வேலை கிடைக்கவில்லை என்பதால் வாழ்க்கையே முடிந்துவிட்டது, தங்கள் திறமையை யாரும் அறிந்து கொள்ளவில்லை, என்று இவர்கள் அலுத்துக் கொள்வார்கள். ஆனால் நடைமுறை வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் வாய்ப்புகள் என்பது வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

“முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் வெற்றிகளின் எண்ணிக்கையை உயர்த்த முடியாது” என்ற வேதவாக்கு அவர்களுக்கு புரிவதில்லை. நீங்கள் தட்டுவதைப் பொறுத்துதான் கதவுகள் திறக்கப் படுகின்றன, என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

கொள்கையில் இருக்கிறது வெற்றி: 5–ம் வகுப்பு படிக்கும் மாணவனிடம் எதிர்காலத்தில் என்னவாகப் போகிறாய்? என்றால் 'கலெக்டராகி சேவை செய்வது' என்று கூறுகிறான். அதே மாணவன், பள்ளிப் படிப்பை முடிக்கும் போது தனது கொள்கையில் இருந்து பின்வாங்கி, ஏதாவது ஒரு பட்டம் படித்தால் போதும் என்று நினைக்கிறான். டிகிரிக்கு பின்பு ஏதோ ஒரு வேலை கிடைத்தால் போதும் என்கிற நிலைக்கு வந்துவிடுகிறான். சில கடின முயற்சிகளுக்குப் பின்பு வேலை கிடைத்துவிடுகிறது. ஒன்றிரண்டு ஆண்டுகள் பணியாற்றிய நிலையில் வேறு வேலையை மனம் நாடுகிறது. இப்படி காலத்துக்கு ஏற்றபடி கொள்கையை மாற்றிக் கொள்பவர்களை இன்று எளிதாக பார்க்க முடிகிறது.

கொள்கையில் பிடிப்பு இல்லாமல் அடிக்கடி மாற்றிக் கொள்ளும் போது மனநிறைவு என்பது துளியும் இருக்காது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதை போல், அங்கும் இங்கும் மனம் அலைபாய்ந்து கொண்டேதான் இருக்கும்.

உங்களின் இயல்பான ஆர்வம் எந்த துறையில் இருக்கிறதோ அதுசார்ந்த உயரிய லட்சியம் ஒன்றை நிர்ணயித்து திட்டமிட்டு செயல்பட்டால் வெற்றி கிடைக்கும். சில சமயங்களில் தோல்வி கிடைத்தாலும் அது வெற்றிக்கு தூண்டு கோலாக அமையும்.

பாடம் படிக்க வேண்டும்: சின்ன வயதில் மலைபோல் தோன்றிய நிகழ்வுகள் சற்று பெரியவர்களாகிய பின்பு, யோசித்தால் ரொம்ப சின்னதாக தெரியும். சின்ன வயதில் படிப்பிலோ அல்லது வாழ்க்கையிலோ ஏற்பட்டுள்ள சறுக்கலை காலப் போக்கில் பலர் மறந்துவிட்டு, அடுத்த முயற்சிகளில் கவனமாவது உண்டு. ஆனால் ஒன்றிரண்டு பேர், டிகிரி முடித்திருந்தாலும் 8–ம் வகுப்பு தேர்வில் அடைந்த தோல்வியை இன்றும் பெரியதாக நினைத்து வருந்திக் கொள்வதுண்டு.

இவர்கள் புதியதாக எந்தவொரு செயலை செய்தாலும் படபடப்புடனும், அதிகமான விழிப்புணர்வுடன் மேற்கொள்வர். அதாவது மீண்டும் அது போன்றதொரு தோல்வி கிடைத்துவிடுமோ என்ற பயம் அவர்களிடம் இருக்கும்.

வாழ்க்கையில் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளில் இருந்தும் பாடம் படித்துக் கொண்டால், நடைமுறை வாழ்க்கையில் ஏற்படும் வெற்றியும்–தோல்வியும் நிலையானது அல்ல என்பது தெரியவரும்.

புதிய சிந்தனைகள் தரும் வெற்றி: பலத்த போட்டி நிறைந்த விற்பனையாளர் பணியில், தனக்கு நிர்ணயித்துள்ள இலக்கினை ரமேஷ் சரியாக நிறைவேற்றி மாதம் ரூ.20 ஆயிரம் ஊதியம் பெறுகிறார். ஆனால் இந்த வருமானமே போதும் என்று தன்னுடைய திறமைக்கு ஒரு மனவிலங்கிட்டு பணிபுரிகிறார். ஆனால் இதேப் பணியை, சந்தையில் அதிகம் போட்டி இல்லாத தொழில் ஒன்றை தேர்ந்தெடுத்து மேற்கொண்டால் அவர் ரூ.50 ஆயிரம் வரை மாதந்தோறும் சம்பாதிக்க முடிவதுடன், விரைவாக சாதிக்கவும் முடியும். ஆயினும் அவர் அந்த முயற்சியில் துளியும் இறங்கவில்லை. இதுபோன்ற நிலையில் உள்ளவர்கள், தங்கள் மனவிலங்கை அகற்றி, புதிய கோணத்தில் சிந்தித்து செயல்பட்டு வெற்றியாளராகலாம்.



சுரேஷ்குமார்

*தயாரித்து வழங்கியது: தாருல்ஸஃபா சாதிக்*